







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 6 5.02.2025



ஸ்ரீமத் ஸ்ரீவராஹ மஹாதேசிகன்
ஸ்ரீமுஷ்ணம் சின்னாண்டவன்

ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# உள்ளே....
# படிக்க வேண்டிய *முத்துக்கள்*

1 1.நடாதூரம்மாள்- எங்கள் ஆழ்வான் வருத்தாந்தம்
2 2.வர்ணாஸ்ரம தர்ம காண்டத்திலிருந்து
3 3.ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரத்திலிருந்து முத்துக்கள்
4 4.ஶ்ரீரங்ககத்யத்தில் எம்பெருமானின் கல்யாண குணங்கள்
5 5.ஸ்வாமி தேசிகனின் 3 முத்துக்கள்



# 1.நடாதூரம்மாள்- எங்கள் ஆழ்வான் வருத்தாந்தம்

நடாதூரம்மாள் தம் பாட்டனார் நடாதூர் ஆழ்வானிடம் ஸ்ரீபாஷ்ய காலட்சேபம் கேட்க விழைந்தார்.ஆனால் அவருக்கு மிக வயதாகி விட்டதால், திருவெள்ளறை சென்று எங்கள் ஆழ்வானிடம் கேட்கச் சொன்னார்.எங்கள் ஆழ்வான் ராமானுஜரிடமே நேரடியாக ஸ்ரீபாஷ்யம் கேட்டவர்.கூரத்தாழ்வான் கண் இழந்த பிறகு,ராமானுஜர் ஸ்ரீபாஷ்யம் சொல்ல அதைப் பட்டோலைப் படுத்தினார் இவர்.

காஞ்சியிலிருந்து,திருவெள்ளறை சென்ற நடாதூரார்,ஆழ்வான் திருமாளிகைக் கதவைத் தட்டினார். உள்ளே இருந்த ஆழ்வான் "யார்" என்று கேட்க,"நான் வரதன்" என்றார் இவர் "நான் செத்தபின் வாரும்" என்றார் அவர்.

அம்மாள் ஒன்றும் புரியாமல் திரும்பி காஞ்சிக்கே சென்று,பாட்டனாரிடம் நடந்ததைக் கூறினார்.அவர் 'நான் என்னும் அஹங்காரம் இல்லாமல்(செத்த பின்) வா' என்று விளக்கினார்.உடனே மீண்டும் திருவெள்ளறை வந்து , "அடியேன்தாசன்,வரதன்"என்றார்

எங்களாழ்வான் அவரை உகந்து வரவேற்று அவருக்கு ஸ்ரீபாஷ்யம்,அதன் விசேஷ அர்த்தங்களை விரிவாக காலட்சேபம் செய்தார்.அவரை அழைத்துக் கொண்டு பல திவ்யதேசங்களுக்கும் சென்றார்.

திருவெள்ளறையை விட்டு, ராஜபாளையத்துக்குச் சற்றுத் தெற்கே உள்ள 'கொல்லங்கொண்டான்' என்னும் ஊரில் இருந்தார். நடாதூர் அம்மாள் அங்கும் சென்று அவருக்குக் கைங்கர்யங்கள் செய்து காலட்சேபம் கேட்டார்.



**நடாதூர் அம்மாள் -ஸ்வாமி தேசிகன்**

# 2. வர்ணாஸ்ரம தர்ம காண்டத்திலிருந்து

**1. வேதங்களும் அதன் பிரிவுகளும் ஸூத்ரங்களும்.**

- ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வவேதம் என, வேதங்கள் நான்கு.
- ருக் வேதத்திற்கு ஆச்வலாயனம், கௌஷீதகம் என இரு சூத்ரங்கள்.
- யஜீர் வேதம் க்ருஷ்ண யஜீர் வேதம், சுக்ல யஜூர் வேதம் என இரு பிரிவுகள்.
- க்ருஷ்ண யஜுர்வேதத்திற்கு - போதாயனம், ஆபஸ்தம்பம், பாரத்வாஜம், ஸத்யாஷாடம், வைகானஸம் - என ஐந்து சூத்திரங்கள்.
- சுக்ல யஜுர்வேதத்திற்கு காத்யாயனம் என்ற ஒரே சூத்ரம்.
- ஸாம வேதத்திற்கு -த்ராஹ்யாயனம், ஜைமினீயம் என்று இரண்டு சூத்ரங்கள்.

**2.வர்ணம்**.

- பிரம்ம, ஷத்ரிய, வைச்ய, சூத்ர என நான்கு பிரிவுகள்.

**3. யுகங்கள்.**

- க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என நான்கு.
- நான்காவதான கலியுகத்தில் பராசரஸ்ம்ருதியே முக்கியமானது.

**4. கலியுக நிஷித்த தர்மங்கள்.**

4.1 ஒரு ப்ராஹ்மணன் 12 வருஷம் கிணற்று நீரிலேயே ஸ்நாநம் செய்து வருவானேயானால் அவன் ப்ராஹ்மணியத்தை இழந்தவனாகி விடுகிறான்.

4.2 ஜ்யேஷ்டபாகம் கொடுத்தல், ஸந்யாஸம் செய்து கொள்ளல், ஆசௌசத்தைக் (தீட்டை) குறைத்தல், ப்ரஹ்மச்சாரியாக வெகு காலமிருத்தல், க்ருஹஸ்தர்கள் தூரதேசத்திற்கு தீர்த்த யாத்திரை செய்தல், யதிகள் சாயங்காலத்தில் வீட்டில் இருத்தல், பிராமணர்கள் தூரதேசத்திற்குச் செல்லுதல், கடல் யாத்திரை செய்தல் இவைகள் கூடாது.



## 3.ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரத்திலிருந்து முத்துக்கள்

1. "எம்பெருமானிடம் தனது பரத்தை ஸமர்ப்பித்துவிட்ட ஒரு ப்ரபந்நன், முக்தனைப்போல தோஷங்கள் அற்றவனாய் இருந்துகொண்டு, ஒரு முக்தன் அறிந்திருப்பதுபோல எம்பெருமானுடைய திருவுள்ளத்தை தான் அறியாதவனாய், செய்யாதுவிடப்பட்ட தனது கடமைகளால் தனக்கும் பிறர்க்கும் பலவகைத் தீங்குகள் விளையுமென்பதை அறிந்தவனாக, ஸ்வதந்த்ரனான பகவானுடைய மீறப்படக்கூடாத ஆக்ஞைகளை அனுஷ்டித்துக்கொண்டு மோக்ஷத்தை அடையும்வரை ஸாஸ்த்ரத்தின் வழியையே பின்பற்றி நடந்துகொள்கிறான்".

2. ஒரு அதிகாரி, ஸர்வஸாஸ்த்ரங்களின் ஸாரமான ரஹஸ்யத்ரயத்தை நன்கு அறிந்தவனாய், சேதன, அசேதன, ஈஸ்வர தத்வங்களைப் பற்றிய கூர்மையான அறிவுடையவனாய், அல்பமான விஷயங்களில் பற்றறுத்தவனாய், பக்தி ப்ரபத்திகளில் நிஷ்டையுடையவனாய், உபாயங்களைப்பற்றிய தெளிவை- யுடையவனாய், இன்னொரு உபாயத்தில் ஸக்தியற்று வருந்தியவனாய், அங்கங்களுடன் கூடிய பரந்யாஸத்தினால் செய்தவேள்வியனானவனாய், தன்னுடைய நிஷ்டைக்கு ஏற்ற கைங்கர்யவிதியை இந்த ப'த்'த' தலையில் ஸாஸ்த்ரங்களில் காணும் நியமங்களுடன் கூடியதான, அபராதமற்ற, பகவத்பாகவத பக்திக்கு ஏற்ற எதேனுமொரு க்ஷேத்ரத்திலே செய்துகொண்டு, பின் ஸ்தூல ஸூக்ஷ்ம ஸரீரங்களை விட்டவனாய் அச்யுதனை இடைவிடாது அனுபவிக்கிறான்.



SvAmi Desikan, SrI maTham, Tiruvallikkeni

# 4. ஸ்ரீரங்ககத்யத்தில் எம்பெருமானின் கல்யாண குணங்கள்

- அபார கருணாம்புதே - கருணைக் கடலே;

• அநாலோசித விசேஷ அசேஷலோக சரண்ய - ஆச்ரிதரிடம் ஏற்றத் தாழ்வு பாராதவனே;

• ப்ரணதார்த்திஹர - சரணடைந்தார் ஆர்த்திகளை நீக்குபனே;

- ஆச்ரித வாத்ஸல்யைக மஹோததே - ஆச்ரிதர் தோஷங்களைக் கணிசியாமல் பரிவு காட்டுபவனே;

- அநவரத விதித நிகில பூத ஜாதயாதாத்ம்ய - முக்காலமும் உணர்ந்தவனே;

- ஸத்யகாம - அவாப்தஸமஸ்தகாமனே;

• ஸத்ய ஸங்கல்ப - தப்பாத ஸங்கல்பம் செய்ய வல்லவனே;

- ஆபத்ஸக - ஆபத்பாந்தவனே;

- காகுத்ஸ்த - இக்ஷ்வாகு வம்சத்தில் காகுஸ்தனாக அவதரித்த பெருமையனே;

- ஸ்ரீமன் - பிராட்டியை விட்டுப் பிரியாதவனே;
- நாராயண -நர, நாரங்களை அயனமாக (இருப்பிடமாக) உடையவனே;
- புருஷோத்தம - உத்தம புருஷனே;
- ஸ்ரீரங்கநாத - கோயிலில் கண் வளர்ந்தருளுபனே;
- மம நாத - அடியேனுக்கு உள்ள ஒரே நாதனே;
- நமோஸ்து தே - சேஷத்வ ருபமான ப்ரணாமங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஸ்ரீமதே ராமானுஜயா நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# 5.ஸ்வாமி தேசிகனின் 3 முத்துக்கள்

1. ஒரு வைணவன் ஸதாசார்யனின் பக்கலில் தத்வ-ஹித-புருஷார்த்தங்களை நன்கு கேட்டறிந்து தெளியவேண்டியது மிகவும் முக்கியம். அதற்காக நம் முன்னோர்களால் முதன்மையாக வகுக்கப்பட்டுள்ள நான்கு காலக்ஷேப கரந்தங்கள் ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீகீதாபாஷ்யம், ஸ்ரீபகவத்விஷயம், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் என்பன. அவற்றுள்ளும் வடமொழியும் செந்தமிழும் கலந்த மணிப்ரவாளநடையிலுள்ள ஸ்வாமி தேஸிகனின் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரமென்னும் மஹோந்நதமான க்ரந்தம் நாம் அறியவேண்டிய வற்றைமட்டும் அல்லாது. அறிந்து அனுஷ்டிக்க வேண்டிய அம்ஸங்களையும் விளக்கிச் சொல்வது இன்னொரு க்ரந்தத்தை நாடவேண்டாதபடி இது ஒன்றிலிருந்தே அனைத்தையும் அறியக்கூடியவண்ணம் ரத்னமான விஷயங்களைக் கொண்டுள்ள பெருமையையும் பெற்றது இது.

2. 'ரஹஸ்யத்ரயம் என்பது வேதாந்தவாக்யங்களிலே சொல்லப்பட்டுள்ள, ஆத்மாவிற்கு ஹிதத்தைத் தரக்கூடிய விஷயங்கள் அனைத்தையும் உட்கொண்டுள்ளது. அவையாவன: முதலாவது **அஷ்டாக்ஷரம்** என்றுசொல்லப்படுகிற **திருமந்த்ரம்** அல்லது **மூலமந்த்ரம்**, இரண்டாவது ஸரணாகதியாகிற உபாய அனுஷ்டானத்துக்கு கரணமந்த்ரமாக இருக்கக்கூடிய **த்வயம்** என்கிற மந்த்ரரத்னம், மூன்றாவது **"சரமஸ்லோகம்**, இச்சலோகம் கீழிரண்டு மந்த்ரங்களைப்போல் ஸ்ருதியில் வெவ்வேறு இடங்களிலிருந்து எடுத்து ஒன்றாகத் தொடுக்கப்பட்டதல்ல. ஸாக்ஷாத் எம்பெருமானே ஆதியஞ்சோதிவுருவை அங்குவைத்து நமக்காக இங்கு வந்து பிறந்து. பரமபுருஷார்த்தத்திலும், அதை அடைவதற்கான உபாயத்திலும் நமக்கு விஸ்வாஸத்தை உண்டாக்குவதற்காகத் தாமே அருளிச்செய்த அருமருந்தான விஷயம். இம்மூன்று மந்த்ரங்களையும் ஆசார்யனிடத்தே உபதேஸ ரூபமாகப் பெற்று **(ஸ்ரவணம்)**, பின் அதை இடைவிடாமல் சிந்தனை செய்துகொண்டிருந்து (**மனனம்**), அதனால் உண்டாகும் விஷய நிர்ணயத்தை பகிர்வது (**விதரணம்**) நம் ஸம்ப்ரதாயம்.

3. "வேதாந்தத்தைக் காட்டிலும் மேலான ஸாஸ்த்ரமோ, மதுஸூதனனைக் காட்டிலும் மேலான தத்வமோ, பாகவதர்களைக் காட்டிலும் மேலான புண்யதீர்த்தமோ, அவர்கள் உகந்தவிடங்களைக் காட்டிலும் மேலான ஸத்வகுணம் நிறைந்த வேறு இடமோ, ஸத்வகுணத்தைக் காட்டிலும் ஆரோக்யத்தை தரும் வேறு வஸ்துவோ, ஸதாசார்யன் பக்கலிலிருப்பதைக் காட்டிலும் ஞானக்ரஹணத்திற்கு வேறு சிறந்த ஸாதனமோ, மோக்ஷத்தைக் காட்டிலும் சிறந்த ஸுகரூபமானது வேறொன்றோ இல்லை. இவைபோலவே, த்வய உச்சாரணத்தைக் காட்டிலும் க்ஷேமத்தைத் தருவது வேறொன்றில்லை".